உ

சிவமயம்



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும்
கட்டப்பிராயை வதிவிடமாகவும்
கனடாவை வாழ்விடமாகவும் கொண்டு
சிவபதம் அடைந்த

# திருமதி
# இரத்தினம்மா
# கந்தையா

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

07.12.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர்
# திருமதி இரத்தினம்மா கந்தையா

இரத்தின அகழ்வு
06.03.1923

இறுதி தின நிகழ்வு
07.11.2004

## திதி நிர்ணயம்


சீரோங்கு தாரணவருடச் சிறந்த ஐப்பசி ஈர்பதினொன்று
பேரோங்கு அபரபக்க ஏகாதசி ஞாயிறு நன்னாளில்
கல்வியங்காடு வந்துதித்த இரத்தினம்மா பெண்ணணங்கு
நல்கினார் இறைவனடி புகழுடனே பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்

எமக்கெல்லாம் அன்பான அம்மாவாய்!
நேசமுள்ள மாமியாய்!
தேனினுமினிய பாட்டியாய்!
பாசம் நேசம் நிறைந்த சகோதரியாய்!
உறவு காத்து நட்பு வளர்த்து
உலகத்தார் உள்ளத்தில் கருணைக் கடலாய்
நல்லற வாழ்வு வாழ்ந்து வழி நடத்தி
பேருடனும் புகழுடனும் வாழ்வாங்கு வாழ்ந்து
இறைவன் இணையடி இணைந்த
எம் குடும்பத் தலைவி

**திருமதி இரத்தினம்மா அவர்களுக்கு**



இந்த நினைவு மலரை
எமது சுகமார்ந்த
அன்புக் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
அன்புடன் குடும்பத்தினர்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோருமுடிவி லொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம் பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே.

- பட்டினத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் துதி



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

## தேவாரம்

தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதற் கூத்தா
அம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுருகாற்றுப்படை

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவ ரையான் பின்செல்லேன்-பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
கடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரிய தமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேசமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

## திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அம்மை பாடல்கள்

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியல்
பண்களிக் குங்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஈகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அம்குச பாசங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு
தீங்கில்லையே.

கலையாத கல்வியும் குறையாத வயதும்ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்ஒரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனார் தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடத்தில் சொல்லாமல் வேறுஎந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டு முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத்தினம் வழி அனுப்பு!

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளைநீ தீருமம்மா!

## காயத்ரி மந்திரம்

ஓம் பூர் புவஹ ஸ்வஹ
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோயோ நஹ ப்ரசோதயாத்

## Gayathri Mantra

Om Bhoor Bhuvaha Swaha
Om Thath Savithur Varenyam
Bhargo Delvasya Dheemahi Dhiyo Yo
Naha Prachodayath.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி இரத்தினம்மா கந்தையா அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

ஈழத்தின் முத்தென இலங்கிடும் யாழ் நகரிலே ஓர் சிற்றூர் கல்வியங்காடு எனும் அழகிய கிராமமாகும். சைவமும் தமிழும் மேலோங்க கற்ற பல பெரியோர் களையும் சான்றோர்களையும் தன்னகத்தே தாங்கி புகழ் பூத்து விளங்கும் கல்வியம்பதியிலே "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவன் வாய்மொழிப்படி வாழ்ந்த சின்னத்தம்பியும் மங்கை நல்லாள் எனும் பெயர்கொண்ட தங்கம்மா எனும் இருவரும் மணமுடித்து மனமொத்து வாழ்ந்தனர். இவர்களின் இல்லறம் எனும் நல்லறத்தில் விளைந்த அரிய முத்துக்கள் ஐந்து. இவ்வரிய முத்துக்களில் முதல் வந்த முத்தே இரத்தினம்மா ஆவர்.

1923ஆம் ஆண்டு இரத்தினமாய் வந்து உதித்த இரத்தினம்மா நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து துள்ளி நடைபோட்டு பள்ளிப் பருவம் முடித்து பருவ மங்கை ஆனாள். பரமேஸ்வரி, சுப்பிரமணியம், அன்னம்மா, லக்சுமி எனும் அன்புச் சகோதரர்களுக்கு அக்காவாய் இருந்தார். பெற்றெடுத்த பெற்றோர் தம்மகளின் இளமை கண்டு மகிழ்ந்து வரன் தேடும் படலத்தில் இறங்கினர். மங்கையர் திலகமாம் இரத்தினம்மா குற்றம் பாராது சுற்றம் பேணி அறம்பல செய்து மகிழ்வுற்று வாழும்போது இவருக்கேற்ற மணாள னைப் பெற்றோர் தேர்ந்து எடுத்தனர்.

நீர்வளம், நிலவளம் நிறைந்த "நீர்வேலி" எனும் சிற்றூரில் அன்பும் அறனும் கல்வியிற் சிறந்து விளங்கிய குடும்பத்திலே ஒழுக்க சீலராய் வாழ்ந்தவர் சண்முகம் அவர்கள். அவர் கைப்பிடித்த நாயகி செல்லம்மா எனும் நல்லாள். இவர்களின் புதல்வர் கந்தையா ஆவர். இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த கண்ணியவான். பெற்றோர், உற்றார், உறவினர் ஆசியுடன் 1944ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு இரத்தினம்மா - கந்தையா அவர்களைக் கைப்பிடித்தார். இவர் மரக்கூட்டுத்தாபன ஒப்பந்தவேலை, வியாபாரம் ஆகியன செய்து பொருள் ஈட்டினார்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ற மங்கை அவள். மனைவிக்கு ஏற்ற குணம் பொருந்திக் கணவனின் வருவாய்க்கேற்ற செலவு செய்து இல்லறத்தில் இனிதே இன்புற்று இருந்தனர்.

கொண்டான் குறிப்பறிந்து இல்லறம் எனும் நல்லறம் செய்து நன்மக்கள் பேறு பெற்றனர். தந்தையின் பெயர் சொல்ல தனையர்கள் ஐவரும் தாயின் வழி செல்ல நங்கையர் இருவருமாக எழுவரைப் பெற்று பெருமை பெற்றனர்.

நங்கையருள் மங்கையைத் தலை மகளாய் அடைந்து பெருமிதங் கொண்டனர். மங்கைக்கு சிறுதொண்டன் எனும் சிவனடியானை மணாளனாக்கி மகிழ்ந்தனர். அதன் பலனாக ரமேஷ், ரேணுகா, தமயந்தி, ஜனார்த்தனர், கஸ்தூரி எனும் ஐவரைப் பெற்று அறங்காத்து வாழ்கின்றார்.

நன்மகனாய் தம் பெயர் சொல்ல கதிர்காம நாதனைப் பெற்று பெருமை அடைந்தனர். இவர் தங்கேஸ்வரி என்னும் பெண்ணை இல்லாள் ஆக்கி இன்புற்று நிருத்திகா, நிரூபிகா என்ற இரு மலர்களைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ்கின்றனர்.

என்றும் வசந்தமே என்று வாழ்ந்த வசந்தகுமாரியை மங்கையின் அருமைச் சகோதரியாகப் பெற்று பெரும் பேறு பெற்றனர். சண்முகநாதன் எனும் சண்முகன் அடியானை மணாளனாகத் தேடிக்கொடுத்து மகிழ்ந்தனர். அவர்களோ அருமை பெருமை ஆகக் காத்து காலம் தாழ்த்தி கவிஷன் எனும் அருமை மைந்தனைப் பெற்று அமைதியாக வாழ்கின்றனர்.

சண்முகநாதன் எனும் மகவைப் பெற்று மக்களை பெற்ற மகராசி ஆகி மகிழ்ந்தார். இவருக்கு உமாகாந்தியை மனையாளாக்கி மகிழ்ந்தனர். பிரசாந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஷிகா, அஷ்வதி ஆகிய மூவரைப் பெற்று முறைமையாக வாழ்கின்றனர்.

அடுத்து சிவலோகநாதன் எனும் நாமத்தைக் கொண்ட நன்மகனைப் பெற்று சுகன்யா எனும் நங்கையை நல்லறம் எனும் இல்லறத்தில் இருத்தி இன்புற்றனர். இவர்கள் சோபிகா, பிரியங்கா, சங்கவி எனும் மூன்று முத்துக்களைப் பெற்று பெருமையோடு வாழ்கின்றனர்.

கடைக்குட்டியாக சிவசோதிநாதன் எனும் மகனைப் பெற்று மாதர் குல மாணிக்கமாகினர். இவருக்கு விஜிதா எனும் வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொடுத்து வளமாக வாழக்கண்டு மகிழ்ந்தனர். இவர்கள் அனிஷா என்னும் அன்புமகளைப் பெற்று இன்பமான இல்லறம் நடாத்தி வாழ்கின்றனர்.

இறுதியாக ரவீந்திரநாதன் எனும் மகவை ஈன்று தன் மண்ணுக்கே ஈந்து தலை நிமிர்ந்து வாழ்ந்து பெருமை கொண்டவர். "தியாகி" ரவியின் தாயார் தியாகி என்ற பேறு பெற்றவராக வாழ்ந்து வாழ்க்கை என்பது என்ன என்பதை எல்லோருக்கும் எடுத்து இயம்பி இன்றும் இன்முகத்தோடு வாழ்ந்தார்.

மெழுகுவர்த்திபோல தன்னையே உருக்கி தனது பிள்ளைகளே உலகம் என்று அவர்களுக்காகவே இறுதிவரை வாழ்ந்தவர். சூரியனைக் கண்டு பயிர்கள் மலர்வதுபோல பிள்ளைகளின் வரவு அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு பூரிப்படைவது அவரது குணவியல்பு.

"இவ்வுலகில் இன்பமும் துன்பமும் ஒன்றே" என்றுணர்ந்து தாம் வாழும் காலத்தில் சகல சௌபாக்கியங்ளைப் பெற்று மக்கள், மருமக்கள், பேரர், பூட்டப்பிள்ளைகள் எல்லோரையும் கண்டு களித்து மகிழ்ந்து தானே அம்பாள் பாதம் செல்ல அடி எடுத்து சென்ற பெருமை வேறு யாருக்கும் கிடைக்காது.

"இப்படியே அம்பாள் பாதம் போகின்றேன்" என்று மக்களுக்கு கூறிவிட்டு மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற அம்மையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகன் சிவாவின் நினைவலைகள்...!

கண்ணை இமை காப்பதுபோல் காலமெல்லாம் எமைக்காத்த தாயே! இன்று நீங்கள் கண்ணுறங்கி நித்தியமாய் நீள்துயில் கொள்ளும் வேளையிலே என் நெஞ்சத்து நினைவுகளை உங்கள் காலடியில் இறக்கி வைத்து கண்ணீர் வடிக்கின்றேன்!

எங்கள் குடும்பத்து ஒளிவிளக்காய் காலமெல்லாம் ஒளிர்ந்து ஆத்மவொளிபெற்று ஆண்டவனுடன் ஐக்கியமாய்ப் போனீர்கள். என் எண்ணத்தை சின்ன வயதிலிருந்தே ஓட விட்டால் உங்களோடு நாம் வாழ்ந்த வாழ்வு ஓராயிரம் கதை சொல்லும். பெயருக்கேற்ற இரத்தினம்போல மனிதருள் மாணிக்கமாய் வாழ்ந்து ஏழு குழந்தைகளைப் பெற்றெடுத் தீர்கள். அதற்காக நீங்கள் பட்ட கஷ்டங்களை நினைத்தால் என்நெஞ்சு வெடித்து விடும்.

பிள்ளைகளெமை நீங்கள் அடித்து வளர்த்ததில்லை. அன்பினால் வளர்த்து ஆளாக்கினீர்கள். யாரையும் குறைசொல்லி நாம் கேட்டதில்லை. என்றும் எல்லோரிடமும் நிறைவைக்கண்டு இனிமையாய் வாழ்த்தினீர்கள்.

நான் சிறுவனாயிருந்த காலத்தில் உங்களுக்கு சத்திர சிகிச்சை செய்தபோது "நான் செத்தால் நீ என் செய்வாய்" எனக் கேட்க அதற்கு நான் தாங்க முடியாமல் அன்று விம்மி அழுதேன். இன்று உங்களை நாம் இழந்து தாயிழந்த கன்றினைப்போல் தவிக்கின்றோம் அம்மா!

எமது தம்பி கொக்காவில் முகாம் தாக்குதலில் தியாகியாக, அந்தத் தியாக தீபத்தை நெஞ்சினிலே நிறுத்தி என்றும் எம்முடன் அவன் வாழ்வானென்று கூறி நெஞ்சினிலே அவனை சுமந்து இதுவரை வாழ்ந்தீர்கள். இப்போ அவனோடு நீங்களும் ஐக்கியமானீர்கள்.

எனக்கும் உங்களுக்குமான உறவு தாய் - மகனை விட ஒருபடி மேல்தான். "ஞானசம்பந்தன்தான் என் வயிற்றில் குழந்தையாகப் பிறந்தான்" என்று கடைசியில் கட்டிலிலேயிருந்து சொன்னீர்கள். அடுத்து எனது "சூரியன்" நீதானென்று சொல்லி வாழ்ந்தீர்கள். இப்போ இந்த சூரியன் உங்கள் பிரிவால் இருண்டு விட்டான். இதுவரை நான் கோயிலுக்குப் போய் அறியேன். அம்மாவைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நெஞ்சிலிருத்தி வாழ்ந்தேன். இனி கோயிலிலே கல்லாய் சமைந்த தெய்வத்தை என் அம்மாவென நினைத்து உங்களை வணங்குவேன். இனியும் உன்னோடு நான்பேச என்னோடு நீபேச என் பக்தியை பக்தனும் தெய்வமுமாக பகிர்வேன்.

நீங்கள் இங்கு இல்லாத காலங்களில் உங்கள் நினைவோடுதான் இங்கு வாழ்ந்தோம். இந்தியாவிலும் இலங்கையிலும் உங்களைப் பார்க்க ஓடோடி வந்தேன். என்னைக் குடும்பமாகப் பார்க்க ஆசைப்பட்டு உங்கள் ஆசை நிறைவேறி மகிழ்வெய்தினேன். இங்கு வாழ்கின்ற போதும் உங்களுக்கு விரும்பிய உணவு செய்து நீங்கள் சுவைத்து மகிழ்வெய்தியதை மனக்கண்ணால் கண்டு கொண்டேன்.

இறுதியில் எம்மண்ணையும் எம்மண்ணில் நீங்கள் வளர்த்த மரங்களையும் அம்மன் கோயிலையும் பார்க்க வேண்டுமென ஆசைப்பட்டீர்கள். இறுதி ஆசையை எங்களால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. "உங்கள் பிள்ளைகள் என்றும் ஒற்றுமையாக வாழவேண்டும்; அவரவர் தமது குடும்பத்தை நல்வழியில் நடாத்தவேண்டும்" என்று விரும்பினீர்கள். அப்படியே நடப்போம் அம்மா! இனி நாம் இயற்கையின் வனப்பில்; அசையும் காற்றில்; கோயில் சிலையில்; விளக்கின் ஒளியில் உங்களைத் தரிசிப்போம்.

ஆழமான உங்கள் வாழ்வில் அனைத்தையும் கண்டு ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்துள்ளீர்கள். இப்போ நாம் நெஞ்சடைத்து உங்கள் காலடியில் நிற்கிறோம் அம்மா. இவை எல்லாவற்றையும் உங்கள் ஆத்மா கேட்டபடி இருக்கும். மீண்டும் ஒரு பிறப்பெடுத்தால் உங்கள் மகனாய் நான் பிறக்க வேண்டும் அம்மா.

பிறந்தவர் ஓர்நாள் பிரிவது உண்மை. உங்களாத்மா உடலை உதிர்த்து இறைவனிடம் சங்கமிக்கிறது. ஆன்மா விற்கு அழிவில்லை. இனி உங்கள் பிள்ளைகளும் பேரக் குழந்தைகளும், பூட்டப்பிள்ளைகளும், எம் சந்ததியும் உங்கள் நினைவுகளை சுமந்து உங்கள் வழி நடப்போம். உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் அன்பு மகன் சிவலோகநாதன் (சிவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மகளின் கண்ணீர்த்துளிகள்

எமைப் பெற்றெடுத்த நற்தாயே! எமைப் பேணிப் பாதுகாத்து இன்புற்றாயே! எம் வாழ்வுகண்டு மகிழ்ந்தாயே! எப்படி எமைப் பிரிந்து சென்றாய்?

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்பதற்கிணங்க வாழ்ந்துகாட்டி இறைவனிடம் இரண்டறக் கலந்த அம்மாவே! நித்தமும் நான் உன்னை 'அம்மா அம்மா' என்றழைக்க குரல் கொடுத்து வந்த என்தெய்வமே!

அறுபது நாட்களாக ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருந்த படி நான் வீடுபோய்வர விடைகொடுக்க மறுத்த அம்மா 7ஆம் திகதி அன்று இனியெனக்கு நீ சாப்பாடு தரத்தேவையில்லை என்று வீடு போய்வாவென்று விடைதந்து அனுப்பி வைத்தாயே! இறுதிப் பயணத்தை நான் பார்த்துத் தாங்கிக் கொள்ளமாட்டேனென்றுதான் வாய்நிறையப் 'போய்வா' என்று சொன்னாயா?

உன்நாடித் துடிப்பும் குறைகிறது என்றறிந்து நான் ஓடோடி வருவதற்குள் அம்மனிடம் போய்விட்டாயா? எனக்கு தினமும் எத்தனை கதைகளைச் சொல்வாய் அம்மா! எப்படியம்மா உன்பிரிவைத் தாங்குவேன் நான்.

சின்னஞ்சிறு வயதினில் விளையாடி நானறியேன். எம் எழுவரையும் வளர்த்தெடுக்க எம் அம்மா பட்டபாடு அல்லல் துயர் அனைத்தும் உண்மையிலே நானறிவேன். அதிகாலை எழுந்த அம்மா குனிந்தது நிமிராமல் இரவுவரை உண்ணாமல் உறங்காமல் வேலைசெய்து எமை வளர்த்தாய்! பள்ளி சென்றால் என்மனதில் எம் அம்மா படமாய்விழ ஓட்டமாய் வீடுவந்து பக்க உதவி செய்வேனே!

உன் அம்மா உனக்கிட்ட பெயரில் ஒன்று தங்கம்மா. உண்மையில் குணமதனில் மாற்றுவிடாத் தங்கம்தான் எம் அம்மா. பிள்ளைகள் எமை மறந்தும் சினந்து ஒரு வெண்சொல்லால் திட்டியறியாய்! தடியெடுத்து அடித்ததோ உன் சரித்திரத்தில் இல்லை அம்மா. தந்தையார் தொழிலின்றி நோயுற்றிருந்த காலத்திலும் பொறுமையாய் மனங்கோணாமல் அவரது கடமைகள் அத்தனையும் செய்து முடித்த உத்தமி அல்லவா எம் அம்மா. பசியென்று நாமறியாமல் நேரத்துக்கு நேரம் உருண்டையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துணவுகளைத் தீத்தி எம் எழுவரையும் வளர்த்தாயே! என் அம்மா எப்படியம்மா உன்னை மறக்க?

அம்மாவின் நிலையுணர்ந்து துயர் துடைக்க உன் மகன் சிறுவயதில் வெளிநாடுபோக பிரிவு தாங்காமல் தந்தையும் போய்விட்டார். இந்நிலையில் தந்தையும் தாயுமாய் எல்லாமாய் நீயிருந்தாய்!

மணம் முடித்தும் உனைப் பிரிய மனமின்றி நீ இருந்த இடமெல்லாம் உன்னுடன் ஒட்டியெல்லோ நானிருந்தேன். பிள்ளையின்றி வாடிப்போய் நானிருந்த பத்து வருடங்களும் பிள்ளை - அம்மா என்ற இரு பாத்திரங்களில் நீ இருந்தாய்! பிள்ளை வரம் வேண்டி அம்மனுக்கு பெருநேர்த்தி வைத்து பேரன் பிறந்தது என்று எல்லையில்லா இன்பம் கொண்டாய் அம்மா! கோயில் குளம் என்று போய் அறியாய்! ஊர் சுற்றி நீ அறியாய்!

புருஷன் பிள்ளைகளைத்தான் பூசித்து உன்குடும்பத் தையே தினமும் சுற்றி வலம் வந்த பெரும் தியாகியல்லவோ! நான் வீட்டை விட்டு வரும்போது எடுத்து வந்த பெருஞ் சொத்து நீயல்லவோ! கொள்ளிக்கென்று நீ பெற்ற கடைக்குட்டி உனைவிட்டுப் பிரிந்த கவலையால் நடைப்பிணமாய் எல்லோரும் இருக்கையிலே கடைசிக் கடமை மகன்மார்தான் செய்ய வேண்டுமென்ற பேராவலால் கனடா வரும்போது கட்டி அழுது பிரிய மனமின்றி மறையும் வரை கையசைத்து நின்றோமே!

என் அம்மா போய்விட்டா என்று நான் பட்ட துயரம் கொஞ்சமல்ல; இருந்தாலும் என்கையால் உனக்குக் கடமை செய்ய முடிந்ததையிட்டு இன்று நான் ஆறுகிறேன். நீதான் என் கண்கண்ட தெய்வம் அம்மா!

ஐந்து வருடங்கள் நாலு சுவருக்குள் நானும் பிள்ளையும் எத்தனையோ பிரச்சனைகளுக்குப் பதில் காணத் துடிக்கையிலே என் அம்மாதான் என்னைச் சாப்பிட வைத்திருப்பாய். பேரனை அணைத்திருப்பாய். இந்நிலை யில் உன்னிடம் கற்ற சிக்கனமும் கடமையும்தான் கைகொடுத்தது அம்மா!

உருவமதில் சின்னஞ்சிறு வடிவான அம்மாவெல்லோ! அழகான சேலை உடுத்தால் குட்டி அம்மன் அல்லோ! கூனிக் குறுகி கிளவி என்றும் நீ இல்லை. எந்நேரமும் ஓடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிந்து உன் அன்றாட வேலைகளைச் செய்வதுதான் என் கண்ணுக்குள் நிற்கிறது. வேறு எந்த நிரந்தர வருத்தமோ உனக்கில்லையென்று மனதார ஆண்டவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்த வேளையிலே திடீரென அம்மாவின் உருவையே மாற்றி உயிரையே பலியெடுக்கும் கொடூர வருத்தம் உனக்கு வந்ததோ? சிகிச்சையே இனி இல்லையென்று வைத்தியர்களும் கைவிரித்து விட்ட நிலையில் பரிகாரமோ தேடமுடியாத பாவியாகிவிட்டேன்!

அம்மா! நீ கேட்டாயே எனக்கு வருத்தம் சுகமாகுமா என்று. அந்தவேளையில் வயிறுபற்றி எரிந்ததம்மா பொய்யல்லவோ சொன்னேன். இதற்கப்பால் பிள்ளை - தாய் என்ற உறவில் ஐந்தே ஐந்து மாதம்தான்...எங்களுடன்.

உன் ஆசைப் பேரனுக்கு செல்லங்காட்ட யாருமே இல்லை அம்மா! இந்த மண்ணில் அணைத்தெடுக்க இருந்ததோ ஒரு அம்மம்மா நீங்கள்தான். அக்கா வீட்டிற்கு நீங்கள் போனாலே அழுவானே! இன்று நிரந்தரமாகப் பிரிந்து போய்விட்டதை எம்மாலே தாங்கவே முடியவில்லை.

மருமகனோ அவர் ஒரு தெய்வம் என்று வாயாரச் சொன்னீர்களே! அது ஒன்றே போதுமம்மா! நான் இதுவரையில் கதவு பூட்டியறியேன். நான் அவவுக்குக் காவல் என்று பெருமை பேசிக் கொண்டிருந்தீர்களே! என் கடமை முடியமுன்பு நீங்கள் காவலை முடித்துக் கொண்டு இன்று நான் அம்மனிடம் தான் போகிறேன் என்று அறுதியாய்ச் சொல்லிவிட்டு இறைவனிடம் கலந்து விட்டீர்களே! உங்கள் நிழலில்தான் இருந்தேன் அம்மா. இன்று பலமிழந்து வாடுகிறேன்! யாரிடம் நான் ஆறுவேனோ?

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் ”

என்ற வள்ளுவன் குறளுக்கிணங்க தெய்வமாகிவிட்டீர்களே! மீண்டும் பிறப்பொன்றிருந்தால் நான் உங்கள் வயிற்றில் மகளாகவே பிறக்க வேண்டும் அம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் அன்பு மகள் வசந்தகுமாரி (வசந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் வந்தபோதும் சோர்ந்திடாத எம் அன்னை

தங்கம்மா தம்பதியர் தவம் இருந்து பெற்றெடுத்த முத்து ரத்தினமே அம்மா! கருவறையில் எமை சுமந்து காத்த தாயே! உம்பாதம்தனைத் தினம் தொழுவோம்.

ஏழு வயதில் உங்கள் சகோதர சகோதரிகளைச் சுமந்தீர்கள். மூத்தபிள்ளை என்பதனால் குடும்ப பாரத்தைச் சுமந்தீர்கள். பின் எமைச் சுமந்தீர்கள். சுமையே உங்கள் வாழ்க்கையானதோ? இல்லை அதுவே சுகமாகிப்போனதுவோ?

சுகங்களைத் துறந்து சுமைகளைச் சுமந்து கண்ணெனக் காத்த தாயே! உங்களுக்கு கல்லறையா வைத்தோம்? இல்லை! சுடு நெருப்பில் போட்டு சுட்டெல்லோ எரித்தோம். சுடு நெருப்பில் போட்டு சுட்டெரிக்கும் போதும் "பிள்ளைகள் தள்ளி நில்லுங்கோ நெருப்பு சுட்டெல்லோ போடும்" என்றெல்லோ சொல்லும் உங்கள் மனம்.

நடுநிசியில் நாம் தூங்கக் கண்விழித்துக் காத்த தாயே. பசியென்று சொல்ல முன்பே புசியென்று தந்த தாயே. தந்தையை இழந்தபோதும் தளர்ந்திடாது எமைக் காத்த தாயே. சோதனைகள் வந்தபோதும் சோர்ந்திடாத எம்தாயே. நீங்கள் சொர்க்கம் செல்வது நிச்சயம். வள்ளுவன்போல் ஒரு சில வரிகளில் வாழ்க்கையைச் சொல்லும் எம்தாயே. நீங்களும் ஓர் திருக்குறள்தானே!

உங்கள் கைவிரல்கள் பட்டால் எம் வலிபோகும். உங்கள் மடியில் தலைவைத்தால் எம் மனக்குறைபோகும். தாய் நாட்டைக் காக்கவென தம்பி தனை அழித்தான். ஆனால் எம்மருமைத் தாயைக்கூடக் காப்பாற்ற முடியவில்லையே! பிளையேதும் செய்தாலும் குறைசொல்லா எம்தாயே. முழுமதியோ அம்மா, முத்துமாரியே தாயே! நீங்கள் எங்கும் நிறைந்திருப்பீர்கள்; என்றும் நிலைத்திருப்பீர்கள்!

கடைசி தருணத்திலும் ஒற்றுமையாய் இருங்கள் சாப்பிட வருவேன் என்று சொன்னீர்கள். ஓடி வாருங்கள் மகளாக! உங்களை மார்பிலும் தோளிலும் சுமந்து காப்போம். அதுவரை காத்திருப்போம்.

அன்புப் பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரர், பூட்டப் பிள்ளைகள் இரங்கல்

வட்டிலிலும் தொட்டிலிலும்
மார்மேலும் தோள்மேலும்
இட்டமுடன் போட்டு எம்மை
வளர்த்த இரத்தினமே
இனிக்க இனிக்க இன்னமுதம்
ஊட்டி இன்பமாய்
அன்போடு அணைத்து
மகிழ்ந்த இரத்தினமே
பண்போடு பரிவு, பாசம் எனும்
பாலூட்டிச் சீராட்டி
மாண்போடு வளர்த் தெடுத்த
மாணிக்கமே! காலன் அவன்
எப்படி எடுத்தான் எம்பாட்டி உயிரை
எமக்கு ஏதும் தெரியவில்லை
புரியவில்லை பாட்டி.

இம்மையில் உம் பேரராய் பூட்டராய்
பழங்கதைகள் பலகேட்டு பாசமுடன் வாழ
அமலன் உனை அனுப்பி வைத்தான்
உம்பெரும் அன்பில் நாங்கள்
ஊறி உவந்த நாட்கள் மறக்கமாட்டோம்
என்றும் அம்மையே ஆவலாய் நீங்கள்
அம்மை பாதம் நம்பியே நாளும் தொழுது
நலம் பெற அங்கு சென்றாய்
செம்மையாய் இறைவனார்க்கு
எம்நிலை செப்பி இறைருள் பெற்று
அம்மையே எமக்கு அனுப்புவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் இரங்கல்

"அன்புக்கு முண்டோ அடைக்கும் தாழ்" என்ற அடிக்கு அடிபணிந்து வாழ்ந்த அம்மையே! என்றும் எம்மை எங்கு கண்டாலும் 'பிள்ளாய்' என்ற புன்சிரிப்போடு வாய்நிறைய மனம் மகிழ அழைத்து மகிழ்ந்த அம்மையே! ஒரு தரம் அழைத்தால் இன்னொரு தரம் அழைக்க மாட்டாயோ என்று ஏங்கித் தவிப்போமே அம்மாவே! எப்படி எங்களை விட்டு அம்பாள் பாதம் அடைக்கலம் என்று சென்றீர்கள்? எமக்குப் புரியவில்லையே!

வாழ்க்கைக்கு வழி காட்டியாயிருந்தாய்! வாழ்க்கைத்துணை குறிப்பறிந்து நடந்தாய்! கற்புக்கு கண்ணகியாய் இருந்தாய்! பெண்மையின் பொக்கிஷமாய் விளங்கினாய்! சத்தியத்திற்குத் தலை வணங்கினாய்! தர்மத்திற்குக் கட்டுப்பட்டாய்! மக்களுக்குள் மாணிக்க மானாய்! மாக்களையும் மக்களாக்கினாய்! அத்தோடு ஒளிபெற்ற இரத்தினமானாய். ஊரார் பேர்சொல்லி வாழ்த்த வாழ்ந்த உம்மை காலன் அவன் எப்படிக் கவர்ந்தான். அன்றி நீயாக வாழ்ந்தது போதும் என்று காலன் கயிற்றைப் பிடித்தாயோ! எமக்குப் புரியவில்லை.

அன்றொரு நாள் 'பெரியம்மா' என்று வீட்டுக்கு ஓடி வந்தபோது என்னை 'ஏமாற்றி விட்டாயே' என்றீர்கள். நான் சிரித்தேன். காரணம் நான் 'பெரியம்மை' தானே என்று அன்பொழுகக் கூறினீர்கள். வைத்தியசாலைக்கு நான் வந்தபோது உன்னோடு நிறையப் பேச வேண்டும் என்றீர்கள். அப்போது நோய் மாற வருகிறேன் என்றுகூறி பேசாமல் வந்தேன். இப்போது என்னுள்ளம் என்ன பேச நினைத்தீர்களோ என்று மனம் உறுத்துகிறது; ஆறாத்துயர் கொள்கிறது.

அன்பு, நட்பு, ஆசான் என்பவற்றுக்கு இலக்கண மாய் எமக்கெல்லாம் விளங்கிய பெரியம்மா. இந்தக் காலன் செய்த கோலத்தால் நீங்கள் மீளாத்துயில் கொள்ள நாம் கலங்கித் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
அன்புப் பெறாமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையின் உருவே அவள் வடிவம்

"கடமையே தன் கருத்தளம்" எனப் போற்றி வாழ்ந்த தாய் அவள். தான்பட்ட இன்னல்கள், சுமைகள் எதையும் கண்டு கண்துஞ்சாது தான் பெற்ற செல்வங்களை சீர் பெருக்கி வாழ்ந்தவர். தானடைந்தவரை அவர் கல்லானாலும் என் கணவர் எனப் போற்றி வாழ்ந்த ஒப்பற்ற பதிவிரதை அவள். அவரையே தன் ஜீவனோபாயத்தின் தெய்வமாய் போற்றி வாழ்ந்தார். அவரின் அந்தியப் பொழுதிலும் தன்நலம் கருதாது தன் பணிவிடைகளை கண்ணெனப் போற்றி கரும நெறிகளிலும் வெற்றி கண்டவர். ஏழ்மையிலும் ஈகை எனும் பண்பைப் போற்றி அவருடனே வாழ்ந்து காட்டிய உத்தமி அவள். அவள் பொறுமை என்னும் சிகரத்தின் வித்தகி என்றால் அதில் ஏதும் ஐயமில்லை. நம் வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப வாழ்ந்து காட்டிய மாதரசி அவள்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

வள்ளுவர் தனது சொற்கோர்வையில் இறுதியில் ஏன் பெண்ணை வைத்தாரெனில் ஒரு நன்நெறியில் விளங்கும் குடும்பத் தலைவியிடத்தேதான் இத்தனை குணாம்சங்களையும் உள்ளடக்கி வாழமுடியும் என்ற நிலையில் பெண் என்ற பதத்தை இறுதிச் சொல்லாக்கினார். ஆனால் நம்மவள் நாமம் "இரத்தினம்மா" முதலடியில் பொருள் ஆக வேண்டும். அதுவே அவர் வாழ்வில் மிகப் பொருத்தமான குறள் என்றால் அது மிகையாகாது.

மேலும் அவரிடத்தே உள்ள பண்பான குணவியல்பு யாதெனில் எந்த சின்னஞ்சிறிய சிறார்களையும் பண்போடு "வாங்கோ வாங்கோ" என்று உச்சரிக்கும் நாவன்மை உடையவர். 'கோ' என்ற சொற்பதமே மேலான, உயரிய எனும் பொருள்படும். ஆதலால் அவரும் 'கோ' மகளே. நீவிர் குலமகளம்மா! பண்பு தன்னை பயிற்றுவித்த பத்தினியம்மா! பார்புகழ உன்நாமம் நிலைத்திட பாங்கிற்கு இனியாள் எம் குலமகள் நீவிர் என்பதில் நாமனைவரும் சிரங்குவிப்போமாக!

இப்படிக்கு
அன்பரிற்கு அன்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டப்பிராய் உறவுகளும் முத்துமாரியம்மன் கோவில் அறங்காவல் சபையினரும் திருமதி கந்தையா இரத்தினம்மா அவர்கள் மறைவின்போது வெளியிட்ட கண்ணீர் அஞ்சலி

கற்றோரும் மற்றோரும்
நயம் விரையும் நாயகியாள்
கார் இருளிலும்
அவள் வாழ்வில் கண்ணியமே!
பாரினில் அவர் பயின்ற
பாடமோ அட யாரறிவோம்
நாயகனுக்கு ஏற்ற நாயகியாய்
நயவஞ்சகம் அறியா நல்லுள்ளமாய்
சீரறியப் பெற்ற செல்வங்களே
தன் சீரிய கண்களாய்
அவர்கள் பால் கொண்ட
பேராவலே தன் விரதமாய்
அவர்கள் வாழ்வும் வளம்படவே
விழிவிரண்டு பயிர் வளர்த்து
பண்பாலே பலரது பார்வையும்
அவர் வயப்படவே
பாங்குறு பதிவிரதையாய் திகழ்ந்த
'இரத்தினமே' நீவிர் ஆக
உந்தன் கடமை உணர்வும்
நீர் காட்டும் கண்ணியமுமே
எம்மவர் மத்தியில் உம் நாமம்
புகழ் நிலைபெறச் செய்திடும்
அதில் நீர் ஒரு
உதாரண புருஷியே!
அதில் ஏதும்
ஐயம் இல்லை அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் முத்து இனம், நம் இரத்தினம்



மர வணிகன் கந்தையா மனை திருவாய் ஆனவளே
அற பணியில் துணையவன் இனப் புறவு ஆனவளே
வரு விருந்து பார்த்து வாழ்ந் திருந்த எம் நேயவளே
இறை பணிகள் புரிந்திருந்த இரத்தினம் தூயவளே!

நித்திலம் அனையவளே தன் நேரில்லாத தாயிவளே
முத்தினம் தனுள் இவள்நல் முத்தினம் ஆனவளே
இத்தலத்தில் இவள் ஒரு நாக ரத்தினம் போலவளே
வித்தான எழுவர்க்கு இவள் விளைநிலம் ஆயவளே!

தன் மகவுகளை தாலாட்டி தாயவள் வளர்த்த வேளையிலே
தன் உதிரத்தை பாலாக்கி தனயர்க்கு புகட்டிய காலையிலே
தன் இன உணர்வும் கலந்து தந்த தாயிவள் சிறந்தவளே
தன் இளையவன் இனியவனை தமிழிற்கு தந்து அமைந்தவளே!

நாதன் முன் நடக்க நாள் எல்லாம் அவர் பின் நடந்தவளே
நாதன் முன் இறக்க பின் நாதன் சிவன்பணி தொடர்ந்தவளே
நாதன் ஐவருக்கு நற்றாயாகி இந் நாநிலத்தில் உயர்ந்தவளே
நாதக் கிள்ளையனை இருபெண் பிள்ளையழ அகன்றனையோ!

மருமகள் அனைவரையும் தன் மறுமகள்கள் என அணைத்தவளே
மருமகன் பெறா மகன்கள் தம் தாயென நினை தவத் திருமகளே
பெறுமக்கள் பெற்ற மக்கள் அவர்கள் பேரரென உற்ற சிறுமக்கள்
பெருமக்கள் மதிக்கு பெருவிருட்ச வாழ்வு பெற்றநீ பெருமகளே!

கனடா வருகையில் கண்மணிக்கு கணவர் துணை இருக்கவில்லை
தினம் தொழு முத்து மாரி இவர்க்கு வேறு குறை வைக்கவில்லை
கனக மணிப்பிள்ளை பேரர் பூட்டரால் கவலைகள் நிலைக்கவில்லை
தனம் தானம் உடன் தாய் இவள் தெய்வப் பணிகள் நிற்கவில்லை!

பங்கயக் கை நலத்தால் பாரில் பல் அறம் வளர்த்தவளே
தங்கமணிக் கரத்தால் எமை எலாம் தாயென அணைத்தவளே
துங்கக் கரிமுகன் தூய பக்தை எனும் நற் பேர் எடுத்தவளே
திங்கள் தலை சூடும் எங்கள் சிவன் தாள் அடுத்தனையோ?

சுபம்!

குடும்ப நண்பர்கள் சார்பில்
அன்பன்
**கனக மனோகரன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

POEM FOR MY LOVING GRANDMA

This cancer has caused such pain grandma.
Your death is not the first.
Now you're in heaven and may god protect you.
From this world, which is so cursed.

Lying in your hospital bed.
Your withered voice broke down.
And as your tired eyes watered.
Your once happy soul began to drown.

Weeks may have passed by.
But your face doesn't fade away.
The cancer may have taken your body.
But your soul is here to stay.

Your death was somewhat cruel.
You never got your dying wish.
Stuck in a ward filled with old dying faces.
Not enough time to come home with.

I sat there at your funeral.
The vicar began to speak.
I wanted to read a poem for you.
However inside I felt too weak.

A memory is one good thing I have,
But it compares nothing to a touch.
So I want you to know that I love you.
And I miss you very much.

And when the night comes.
My tears will fall again.
For you are another who has died from cancer.
And who has suffered this cruel pain.

By: Kabishan Shanmuganathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Appama

I love Appama!  She is the best!
I love her because she is always saying
all her grandchildren are not our parents'
kids but her own.

If someone makes us cry
she doesn't like seeing it.
Whatever she has she always gives it to us.
She puts it in her hands closes our hands
and puts her hand on top of ours.
Sometimes she tells me stories
and plays games with me.
When my dad goes to visit her
she is always asking where I am!
She cares about her grand children a lot.
Me and my dad always go to give her
food and she never wants me to leave.
I can't forget her but I know
she is still watching over us from heaven!

Priyanka
granddaughter



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட எங்கள் குடும்பத் தலைவி

## திருமதி இரத்தினம்மா கந்தையா

அவர்கள் சிவபதம் அடைந்தவேளை செய்தியறிந்து எமது இல்லங்களுக்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

பார்வையாளர் மண்டபத்திற்கு வருகைதந்து
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும்
மலர் வளையம் சாத்தியவர்களுக்கும்
கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும்,

இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி, சபிண்டீகரணம்
முதலியவற்றில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும்,
பரமன் புகழ்பாடும் திருமுறைகளை ஓதியவர்களுக்கும்
அனைத்து கிரியைகளையும் நடாத்தி வைத்த
அந்தணப்பெரியோர்களுக்கும்,

இந்த நினைவு மலரை அழகுற அச்சமைத்துத் தந்த
"செல்வா கிராபிக்ஸ்" கிருபா அவர்களுக்கும்,


மற்றும் தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"**

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தத்தின் இரத்தங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



“முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்

மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்

பின்னும் அவனுடைய ஆரூர் கேட்டாள்

பெயர்க்கும் அவனுக்கே பிச்சி ஆனாள்

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்

அகன்றாள் அகலிடத்து ஆசாரத்தை

தன்னை மறந்தாள் தன்நாமம் கேட்டாள்

தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதா உபதேசம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்
அதுவே வோறொருவருடையதாகும்
“இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்”

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா**

Selva Graphics 416-724-8315
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org